[1978 மார்ச் 21

[முற்பகல் 9-40]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பீடி, சுருட்டு கம்பெனிகளில் குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை அமல் நடத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். கடந்த 50 நாட்களாக திண்டுக்கல்லில் இரண்டு சுருட்டு கம்பெனிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை அமல் நடத்த முடியாது என்று அவர்கள் பிடிவாதமாக இருக்கிருர்கள். அது 50 நாட்களாக மூடப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இனிமேலாவது அதுகுறித்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே கேட்கப்பட்டு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னுல் நான் பதில் கொடுத்து இருக்கிறேன். பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டம் 1966 ஆம் ஆண்டு வந்தது. அந்தச் சட்டம் செல்லாது என்று முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று பிறகு அது செல்லும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு அமல்நடத்தி வருகிருேம். அண்மையிலே, சென்னே, வட ஆற்காடு, திருச்சி ஆகிய இடங்களிலே நல்ல ஒப்பந்தங்கள் ஏற்பட்டு தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

கோயமுத்தூர் நகர அபிவிருத்தித் திட்டம்.

*651 விஞ—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயமுத்தூருக்கு ஒரு பெரும் திட்டத்தை மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எவ்வளவு தொகை செலவழிக்க உள்ளது ?

(இ) தமிழகத்தில் எத்தனை நகரங்களுக்கு இத்திட்டம் போடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

1978 மார்ச் 21]

(ஆ) நடப்பு ஆண்டுக்காக ரூ. 2·92 கோடி செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) தமிழகத்தில் இரண்டு நகரங்களுக்கு (கோயம்புத்தூர் மற்றும் மதுரை) இத்திட்டம் போடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்காக அளிக்கப்படும் அந்தப் பணம் ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய கட்டுக்கோப்புக்குள் வருகிறதா? அல்லது தனியாகக் கடன் கொடுக்கப்படுகிற பணமா? இந்தப் பணம் முழுவதற்கும் தமிழக அரசு என்ன வட்டி விகிதத்தைக் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஐந்தாவது பிளான் புரொகிராமில்—தான் வருகிறது. 50 சதவீதம் லோன் ஆகவும் மத்திய அரசு தருகிறது. இதை 25 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதிலே பர்ஸ்ட் பைவ் இயர்ஸ் மாரடோரியம் திரும்பத் தரவேண்டியதில்லை. அதற்கு வட்டி விகிதம் $5\frac{1}{2}$ சத வீதம்.

திரு. செ. மெ. ராஜு : தலைவர் அவர்களே, இந்த நகர் அபிவிருத்தித் திட்டத்திலே சேலத்தையும் இணைத்துக் கொள்வதற்கு உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 3 லட்சம் மக்கள் தொகைக்கு மேல் இருக்கக்கூடிய இடங்களுக்குத்தான் இந்த அபிவிருத்தித் திட்டம். சேலத்தினுடைய மக்கள் தொகை என்ன என்று எனக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் கீழ் கோவை நகரத்தில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? என்ன என்ன நன்மைகள் அந்த மக்களுக்கு அதனால் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான ஒருங்கிணைப்பு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு முடிவான ஒப்புதல் நகர் ஊரமைப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து அளிப்பதற்கு முன் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சி அலுவலாளர்களை கீழ்க்கண்ட பணிகளை, முதலில் தொடங்குமாறு கேட்டுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(1) சிங்காநல்லூர் மற்றும் குறிச்சி பகுதிகளுக்கு தண்ணீர் வசதி அளித்தல்.

(2) குறிச்சி பகுதியில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி.

(3) சிங்காநல்லூர் பகுதியில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது சேலத்தினுடைய மக்கள் தொகை எனக்கு எவ்வளவு என்று தெரியாது என்று சொன்னார்கள். சேலத்தினுடைய மக்கள் தொகை $3\frac{1}{2}$ லட்சம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோவையைப்பற்றிய கேள்வி. தாங்கள் கையை எழுப்புகிறீர்கள். அனுமதி தரவில்லை என்றால் கோபித்துக்கொள்கிறீர்கள், இது சேலத்தைப்பற்றிய கேள்வியல்ல, கோயம்புத்தூரைப்பற்றி இருந்தால் கேளுங்கள், இல்லாவிட்டால் அமருங்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது ? என்ன என்ன நன்மைகள் இந்தத் திட்டத்தின் மூலம் அளிக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சிக்கு 232 லட்சமும் மதுரை மாநகராட்சிக்கு 64 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 296 லட்சம் ரூபாய் ஆகும். இதிலே கோயம்புத்தூர் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மதுரையில் செய்யப்போவது : (1) போக்கு வரத்து வசதி அளித்தல் (டிராபிக் அரேன்ஞ்மெண்ட்).

(2) சந்தைப்பேட்டையில் வடிகால் பம்பிங் ஆலை.

(3) இஸ்மாயில்புரத்தில் வடிகால் வசதி.

(4) வடபகுதிக்கு தண்ணீர் வசதி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூரைப்பற்றிக் கூறும்பொழுது கவிஞர் கண்ணதாசன் அவர்கள்

"கன்னியரின் கனியிதழை கோவை என்பார்,
என்ன காரணத்தினாலோ இவ்வூரை கோவை என்றார்!"

என்று கூறியுள்ளார்கள். அங்கு மேம்பாடு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் படிக்கும்பொழுது இரண்டு வகையான வீட்டு வசதிகளைப் பற்றிப் படித்திருக்கிறேன்.